**அறிக்கை அளிக்கக்கூடியது**

**இந்திய உச்ச நீதிமன்றம்**

**உரிமையியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு**

**உரிமையியல் மேல்முறையீடு எண் _ 1291 _ _ _ _ _ _/2019**

**(சிறப்பு அனுமதி மனு (உ) எண் 6221/2018-இலிருந்து எழுகிறது)**

சுவராஜ் இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் ...மேல்முறையீட்டாளர்

எதிர்

கோடக் மஹிந்த்ரா வங்கி லிமிடெட் ...எதிர்மேல்முறையீட்டாளர்

உடன்

**உரிமையியல் மேல்முறையீடு எண் 1292/2019**

**(சிறப்பு அனுமதி மனு (உ) எண் 6458/2018-இலிருந்து எழுகிறது)**

**உரிமையியல் மேல்முறையீடு எண் 1294/2019**

**(சிறப்பு அனுமதி மனு (உ) எண் 6571/2018-இலிருந்து எழுகிறது)**

**உரிமையியல் மேல்முறையீடு எண் 1293/2019**

**(சிறப்பு அனுமதி மனு (உ) எண் 6597/2018-இலிருந்து எழுகிறது)**

**தீர்ப்புரை**

**மாண்புமிகு நீதியரசர் திரு. ஆர்.எஃப். நாரிமன்:**

1. அனுமதி வழங்கப்பட்டது.

2. தற்பொழுதைய வழக்கானது, பிணையக் கடனாளர், கடன் வசூல் தீர்ப்பாயத்திலிருந்து ( **" க.வ.தீ.**] தீர்ப்பாணையும், அதன் அடிப்படையில் கடன் வசூல் சான்றிதழையும் பெற்ற பிறகு, நிறுமத்தை மூடுவதற்கான மனுவைத்

தாக்கல் செய்வதற்கான அப்பிணையக் கடனாளரின் உரிமை சம்பந்தப்பட்டதாகும்.

3. பம்பாய் உயர் நீதிமன்றத்தின் நீதியர் ஈராயத்தால் பல மேல்முறையீடுகள் விசாரணைக்காக ஒன்றாக எடுத்துக்கொள்ளப்பட்டன. தற்பொழுதைய மேல்முறையீடுகளை முடிவு செய்வதற்கு தேவையான பொருண்மைகளின் சுருக்கம் பின்வருமாறு:

எதிர்மேல்முறையீட்டாளரான கோடக் மஹிந்த்ரா வங்கி பிரச்சனைக்குரிய நிறுமங்களுக்கு பல்வேறு கடன்களை வழங்கிவந்தது. நாளது தேதி வரையில் இந்நிறுமங்களின் கடன் நிலுவைத்தொகை வட்டியுடன் சேர்த்து இந்திய பண மதிப்பில் ரூ.48 கோடியாகும். நிறுமங்களுக்கு கொடுக்கப்பட்ட கடனை வசூலிக்க, எதிர்மேல்முறையீட்டாளர், மும்பையிலுள்ள கடன் வசூல் தீர்ப்பாயத்தை அணுகி, மூன்று தனித்தனி அசல் விண்ணப்பங்களைத் தாக்கல் செய்தது. கடன் வசூல் தீர்ப்பாயமானது, 16.01.2015 அன்று எதிர்மேல்முறையீட்டாளரான வங்கியால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுமதித்து, மூன்று தனித்தனி தீர்ப்புரைகளை வழங்கியது. மும்பை, கடன் வசூல் மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தில் ( **" க.வ.மே.தீ. "**] மேல்முறையீடு ஏதும் தாக்கல் செய்யப் படாததால், அவ்வுத்தரவுகளே இறுதியானவையாகும். பின்னர் மேற்படி தொகைக்கான, 12.08.2015-ஆம் தேதியிடப்பட்ட கடன் வசூல் சான்றிதழ்கள், 1993-ஆம் ஆண்டு வங்கி மற்றும் நிதி நிறுவனங்களுக்கு நிலுவையான கடன்கள் வசூல் சட்டத்தின் பிரிவு 19 (19) -இன் கீழ் வசூல் அலுவலரால் வழங்கப் பட்டன. வழங்கப்பட்ட கடன்களுக்கு பிணையளிக்கப்பட்ட சொத்துகளை ஏலம்விட, பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன என எங்களுக்கு தெரிவிக்கப்பட்டது. ஆனால், இம்முயற்சிகள் ஏதும் பயனளிக்கவில்லை.

இதற்கிடையில், 1956-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின் பிரிவுகள் 433 மற்றும் 434-இன் கீழ், எதிர்மேல்முறையீட்டாளர், 15.04.2015-ஆம் தேதியிடப்பட்ட சட்ட அறிவிப்புகளை அனுப்பியது. எத்தொகையும் செலுத்தப்படாததால் பம்பாய் உயர் நீதிமன்றத்தின் முன்பாக, நிறும மனுவைத் தாக்கல் செய்தது. பிரச்சனைக்குரிய நிறுமங்கள் வணிகரீதியில் நொடித்துவிட்டதாக கூறப்பட்டதால், அம்மனுவானது 26.07.2017-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவின் மூலம், அனுமதிக்கப்பட்டது. பம்பாய் உயர் நீதிமன்றத்தின் நீதியர் ஈராயம் முன்பாக தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடுகளில், முதன்மையான வாதக்கூறுயாதெனில், பிணையக் கடனாளர், கடன் வசூல் தீர்ப்பாயத்திலிருந்து உத்தரவு ஒன்றும், அதன் அடிப்படையில் கடன் வசூல் சான்றிதழும் பெற்றுவிட்டால், தீர்ப்பாயத்திற்கு தனி அதிகாரவரம்பு வழங்கும் சட்டமான கடன் வசூல் சட்டமானது, ஒரு சிறப்பு சட்டமாதலால், நிறுமங்களை மூட, பிணையக் கடனாளர் மனு தாக்கல் செய்யமுடியாது. மேலும் பிணையக் கடனாளர், அதன் பிணையத்தை விடுவித்த பின்னரே, நிறுமத்தை மூடுவதற்கான மனுவைத் தாக்கல் செய்யமுடியும். இவ்வழக்கில் அதுவும் செய்யப்பட்டிருக்க வில்லை என்பதாகும். பின்னர், இவ்வாதங்கள், நீதியர் ஈராயத்தின் ஆதரவு பெறாததால், பிரச்சனைக்குரிய மேல் முறையீடுகள் தள்ளுபடி செய்யப்பட்டன.

4. மேல்முறையீட்டாளர்கள் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. கே. பரமேஷ்வர் பலவாறான வாதக்கூறுகளை எங்கள் முன்பாக வலியுறுத்தியுள்ளார். முதற்கண், கடன் வசூல் சட்டமானது, ஒரு சிறப்பு சட்டம் என்றால் 1956-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டமானது, பொது சட்டமாகும் என இந்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது, மேலும், நிறுமங்கள் நீதிமன்றம் நீங்கலாக, கடன் வசூல் சட்டத்தின் கீழ் கடன் வசூல் தீர்ப்பாயத்திற்கு தனி அதிகாரவரம்பு வழங்கப்பட்டுள்ளதென இந்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இது இவ்வாறிருக்க, ஒருமுறை கடன் வசூல் தீர்ப்பாயத்தை அணுகிவிட்டால், அதே கடனை

வசூலிக்கும் பொருட்டு, நிறுமத்தை மூடக்கோரும் மனுவானது, வெளிப்படையாகவே தடை செய்யப்படுகிறது என்பது கடன் வசூல் சட்டத்தின் பிரிவுகள் 17 மற்றும் 18- ஐ சேர்த்துப் படிப்பதிலிருந்து அறுதிசெய்யப்பட்ட தேவையான முடிவாகும். மேலும் அவர் வாதிட்டதாவது, எந்நேர்விலும், பிணையக் கடனாளர், பிணையைக் கைவிட்டுவிட்டு நிறுமத்தை மூடும் நடவடிக்கையை மேற்கொள்வதா? அல்லது மூடும் நடவடிக்கைக்கு வெளியே அதன் பிணையை வசூலிப்பதா? என்பதை தேர்ந்தெடுக்கவேண்டும். தற்பொழுதைய வழக்கின் பொருண்மைகளின்பேரில், நிறுமத்தை மூடும் நடவடிக்கைக்கு வெளியே அதன் பிணையத்தை வசூலிப்பதற்கான ஒரு வெற்றிகரமான செயலை மேற்கொண்டதன் விளைவாக, அடைமானப் பிணையைக் கைவிடாமல், நிறுமத்தை மூட தாக்கல் செய்யப்பட்ட நடவடிக்கையானது நிலைக்கத் தக்கதல்ல என்பதாகும். எந்நிகழ்விலும், 1956-ஆம் ஆண்டு நிறுமச் சட்டத்தின் பிரிவு 434 (1) (ஆ) -க்கு கவனத்தை ஈர்க்கின்றதேயன்றி, 434 (1) (அ) -க்கு அல்ல என்றும், பிணையானது இதுவரையிலும் வசூலிக்கப்படாததையடுத்து, நிறுமத்தை மூடக்கோரும் மனுவானது, உண்மையில் 434 (1) (ஆ) -இன் கீழ் வந்திருக்கவேண்டும் என்றும், ஆனால் அது, சட்டப் பிரிவு 434 (1) (ஆ) -இன் கீழ் மாறி வந்துவிட்டதால், அது நிலைக்கத்தக்கதல்ல என்றும் வாதிடப்பட்டது. மேலும், எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையில், உயர்நீதிமன்றத்தின் சில தீர்ப்புரைகள், சார்ந்து நிற்கப்பட்டதன் காரணமாக, இத்தீர்ப்புரைகளில் முடிவு செய்யப்பட்டதைப்போன்று, பிணையக் கடனாளர், தனது பிணையை நிறுமத்தை, மூடக்கோரும் மனுவைத் தாக்கல் செய்கிறபோது கைவிடவேண்டுமேயன்றி, அதற்கு பின்னர் அல்ல என்பதை 1956-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின் வகைமுறைகள் தெரிவிக்கின்றன.

5. இவ்வாதங்களுக்கு பதிலளிக்கும்வகையில், எதிர்மேல்முறையீட்டாளருக்காக முன்னிலையான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. ஷியாம் திவான், 1956-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின் பிரிவு 439- ஐ சார்ந்து, குறிப்பாக, தற்பொழுதைய வழக்கிலுள்ளவாறாக நிலவும் பொருண்மை சூழ்நிலையில்

பிணையக் கடனாளர் நிறுமத்தை மூடக்கோரும் மனுவை நிலைநிறுத்தலாம் என வாதிட்டார்.அவரது கூற்றின்படி, மேல்முறையீட்டாளரால் சார்ந்து நிற்கப்பட்ட **அலகாபாத் பேங்க் -எதிர்-கனரா பேங்க்** (2000) 4 எஸ்.சி.சி. 406 என்னும் வழக்கின் தீர்ப்புரையானது வேறுபட்டதாகும். அத்தீர்ப்புரையைப் பொறுத்தவரை, ஒரு நிறுமத்தை மூடக்கோரும் நடவடிக்கையானது நிலுவையில் உள்ளபொழுது அல்லது மூடுவதற்கான உத்தரவு பிறப்பிக்கப்படுகிறபொழுது கடன் வசூல் சட்டத்தின் கீழ் கடன் வசூலிப்பு நடவடிக்கையில் ஈடுபடும்பொருட்டு, நிறும நீதிமன்றத்தின் அனுமதியைப் பெறவேண்டுமா? என்பதேயாகும். பிணையக் கடனாளர், கோரிக்கையை நிரூபிக்கும் கட்டத்தில்தான் தனது பிணையைக் கைவிடும் தீர்மானத்தை, நிறுமத்தை மூடுவதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்னரே எடுக்கவேண்டும் மற்றும் இவ்வழக்கின் பொருண்மைகளின்பேரில், அக்கட்டம் இன்னும் வரவில்லை என்றுங்கூட அவர் வாதிட்டார். மேலும், அவருடைய கூற்றின்படி, கடனைச் செலுத்த இயலாததனடிப்படையிலேயே, மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1956-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின் பிரிவு 434 (1) (அ) -இன் கீழ் சட்டப்படியான அனுமானம் எழுப்பப்பட்டு, செலுத்தவேண்டிய நிலுவைக்கடன் தொகைகள் செலுத்தப்படாவிட்டால், நிறுமத்தை மூடும் நடவடிக்கையைத் தொடரவேண்டும் என்பது தெளிவாகிறது. கற்றறிந்த மூத்த வழக்குரைஞரின் கூற்றின்படி, மேல்முறையீட்டாளர்களுக்கு அளித்த கடன்களை வசூலிக்கும் முயற்சியில் தனது கட்சிக்காரர் இங்குமங்கும் அலைந்தும், எச்சூழ்நிலையிலும் அவ்வாறான பெரும் முயற்சியில் வெற்றிபெறமுடியவில்லை.மேலும், இதுவரையில், ஒன்றுமே திருப்பிச் செலுத்தப்படவில்லை மற்றும் இந்நிறுமங்களால் பெறப்பட்ட கடன் ஏறுமாறாக உயர்ந்து கொண்டே இந்திய பணமதிப்பில் ரூபாய் 48 கோடியாகியுள்ளது. ஆகவே, கற்றறிந்த மூத்த வழக்குரைஞரின் கூற்றின்படி, மேல்முறையீட்டாளர்களால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டை உயர் நீதிமன்றம் சரியாகவே தள்ளுபடி செய்துள்ளது.

6. இரு தரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் வாதங்களைக் கேட்ட பின்னர், முதலில், 1956-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டம் மற்றும் 1993-ஆம் ஆண்டு கடன்கள் வசூல் சட்டம் ஆகியவற்றின் தொடர்புடைய வகைமுறைகளைத் தொகுத்துரைப்பது முக்கியமாகும்.

1956-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின் பிரிவு 434 ( 1) பின்வருமாறு எடுத்துரைப்பதாவது:

> "434. நிறுமமானது எப்பொழுது அதன் கடன்களைச் செலுத்தவியலாததாகக் கருதப்படும்.( 1) ஒரு நிறுமமானது -ஆகிய சூழ்நிலைகளில் அதன் கடன்களைச் செலுத்தவியலாததாகக் கருதப்படுதல்வேண்டும். '"
>
> (அ) ஒரு இலட்சத்திற்கும் மேலான தொகையை உரிமை மாற்றமாகவோ அல்லது வேறுவகையிலோ ஒரு கடனாளரிடமிருந்து கடன்பட்டு, அக்கடன் நிலுவையிலிருக்கும்பொழுது, கடனாளர் அவ்வாறு நிலுவையிலிருக்கும் தொகையைச் செலுத்த நிறுமத்திடம் கோரி, தனது கைபட எழுதி ஒரு கோரிக்கையை, பதிவு அஞ்சல் மூலமாகவோ அல்லது வேறுவிதமாகவோ அதனுடைய பதிவுபெற்ற அலுவலகத்தில் ஒப்படைக்கப்படும்படிச் செய்ய வேண்டும், அதன்பிறகு, மூன்று வாரங்களுக்குள், அதை, நிறுமம் அத்தொகையைச் செலுத்துவதற்கோ அல்லது பிணையமளிக்கவோ அல்லது அதனை ஒன்றிணைத்தோ, நியாயமானவகையில், கடனாளரின் மனநிறைவுக்குட்பட்டு அளிக்கத்தவறுமானால்;
>
> (ஆ) ஏதொரு நிறுமத்தின் கடனாளருக்காதரவாக நீதிமன்றத்தின் அல்லது தீர்ப்பாயத்தின் தீர்ப்பாணை அல்லது உத்தரவின் அடிப்படையில் வழங்கப்பட்ட நிறைவேற்றலோ

அல்லது பிற நடவடிக்கைகளிலோ திருப்தியடையாமல் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ திருப்பப்படுமானால்;

( இ) நிறுமமானது கடன்களைச் செலுத்த இயலாததென தீர்ப்பாயம் திருப்தியுறும் வகையில் நிரூபிக்கப் படுமானால், நிறுமமானது தன்னுடைய கடன்களைச் செலுத்த இயலாதா? என்பதைத் தீர்மானிப்பதில், தீர்ப்பாயமானது, நிறுமத்தின் எதிர்பாரா மற்றும் எதிர்நோக்கிய பொறுப்புகளைக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

xxx xxx xxx"

1956-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின் பிரிவு 439 ( 1) (பி) மற்றும் பிரிவு 439 ( 2) பின்வருமாறு எடுத்துரைக்கப்படுவதாவது:

"439. நிறுமத்தை முடுவது தொடர்பாக பொருந்தும் வகையங்கள்

( 1) நிறுமத்தை மூடுவதற்காக தீர்ப்பாயத்திற்கு விண்ணப்பித்தல் என்பது இப்பிரிவின் வகையங்களுக்குட்பட்டு, தாக்கல் செய்யப்படும் மனுவேயாகும்.

xxxxxxxxxxxxxxx

(ஆ) எதிர்பாரா அல்லது எதிர்நோக்கும் கடனாளர் அல்லது கடனாளர்கள் உட்பட, ஏதேனும் கடனாளர் அல்லது கடனாளர்கள் மூலமாகவும் அல்லது

xxxxxxxxxxxxxxx

( 2) கடனீட்டுப் பத்திரங்களை வைத்திருக்கும் ஒரு பிணையக் கடனாளர் (பங்கு கடனீட்டு பத்திரங்கள் உட்பட) அதுபோன்ற கடனீட்டுப் பத்திரங்கள் தொடர்பாக, பொறுப்பாளர் அல்லது பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டிருப்பினும் அல்லது நியமிக்கப் படாவிடினும், கடனீட்டுப் பத்திரங்களை வைத்திருப்போருக்கான

பொறுப்பாளர் உட்பிரிவு ( 1) கூறு ( ஆ) -இன்படி, கடனாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

xxx xxx xxx"

நிறுமத்தை மூடல் துவங்குவதைக் குறித்து விவாதிக்கும் பிரிவு 441 பின்வருமாறு எடுத்துரைப்பதாவது:

"441. நிறுமத்தை முடும் நடவடிக்கை தீர்ப்பாயத்தால் தொடங்கப்படுதல்/ ( 1) தீர்ப்பாயத்தால் நிறுமம் மூடப்படுவதற்கு மனு தாக்கல் செய்யும் முன்பே, நிறுமத்தை தன்னிச்சையாக முடுவதற்காக, நிறுமத்தால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கு மிடத்து, தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நேரத்திலேயே நிறுமத்தை மூடும் நடவடிக்கை தொடங்கப்பட்டு விட்டதாகக் கருதவேண்டும், மோசடி அல்லது தவறு நிரூபிக்கப்பட்டதன் அடிப்படையில், தீர்ப்பாயம் வேறுவகையில் உத்தரவிடுவது தக்கதெனக் கருதினாலன்றி, தன்னிச்சையாக முடுவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தும் சட்டப்படி சரியாகவே மேற்கொள்ளப்பட்டதாகக் கருதப்படவேண்டும்.

( 2) மற்றபடி, நிறுமத்தை முடுவதற்கு மனு தாக்கல் செய்யப்பட்ட நேரத்திலேயே, தீர்ப்பாயத்தால் நிறுமத்தை மூடும் நடவடிக்கை தொடங்கப்பட்டு விட்டதாக கருதவேண்டும். "

1956-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின் பிரிவு 529 ( 1) பின்வருமாறு எடுத்துரைக்கப்படுவதாவது:

"529. நொடித்த நிறுமங்களை மூடுவதற்கு பொருந்தும் நொடிப்புநிலை விதிகள்- (1) நொடித்த நிறுமத்தை மூடுவதில், அது தொடர்பான அதே விதிகளே நடப்பிலிருந்து, பின்பற்றப்படும். (அ) நிரூபிக்கத்தக்க கடன்கள்;

(ஆ) ஆண்டுத்தொகைகள் எதிர்கால மற்றும் எதிர்பாரா பொறுப்புகளை மதிப்பிடுதல் மற்றும்

(இ) பிணைய மற்றும் பிணையமற்ற கடனாளர்களுக்குரிய உரிமைகள்;

நொடித்தவராக தீர்ப்பளிக்கப்பட்ட நபர்களின் சொத்து தொடர்பாக அவ்வப்போது நடைமுறையிலுள்ள நொடிப்புநிலை சட்டப்படி,

xxx xxx xxx"

1956-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டப் பிரிவு 529-இல் உள்ள குறிப்பீடு, 1920-ஆம் ஆண்டு மாகாண நொடிப்புநிலைச் சட்டப் பிரிவு 47- ஐ குறிப்பதாகும், அது பின்வருமாறு எடுத்துரைப்பதாவது:

**"47. பிணையக் கடனாளர்கள்-** ( 1) பிணையக் கடனாளர் ஒருவர், அவருடைய பிணையை பணமதிப்பாக்கு மிடத்து, பணமதிப்பாக்கப்பட்ட நிகர தொகையைக் கழித்தபின்னர், அவருக்கு சேரவேண்டிய பாக்கியை அவர் நிருபிக்கலாம்.

( 2) பிணையக் கடனாளர், ஏனைய கடனாளர்களின் பொதுநலனுக்காக தன்னுடைய பிணையைக் கைவிடுமிடத்து, அவர் தன்னுடைய மொத்த கடனையும் நிரூபிக்கலாம்.

( 3) பிணையக் கடனாளர், தன்னுடைய பிணையை பணமதிப்பாக்காமலோ அல்லது அதை கைவிடாமலோ இருக்குமிடத்து, அவர், அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ள தன்னுடைய கடனை வைத்திருக்கும் தகுதியைப் பெறுவதற்கு முன்னர், தன்னுடைய சான்றில், தனது பிணைய விவரங்களையும், அதற்கு அவர் கணக்கிட்ட மதிப்பையும் குறிப்பிடவேண்டும் மற்றும் அவ்வாறு மதிப்பிடப்பட்ட பிணையை கழித்த பின்னரே, அவருக்குரிய நிலுவையான ஆதாயப் பங்கினைப் பெற, அவர் உரிமையுடையவராவார்.

( 4) ஒரு பிணையானது, அவ்வாறு மதிப்பிடப்பட்டிருக் குமிடத்து, நீதிமன்றமானது, பிணையை பண மதிப்பாக்குவதற்கு முன்னர், எச்சமயத்திலும் கடனாளருக்கு மதிப்பிட்ட பிணையைச் செலுத்தி, அதனை மீட்டுக்கொள்ளலாம்.

( 5) கடனாளர், தன்னுடைய பிணையை மதிப்பிட்ட பின்னர், அடுத்ததாக அதனை பணமதிப்பாக்கி, பணமதிப்பாக்கப்பட்ட நிகர தொகையானது, கடனாளரால், முன்னதாக ஏதேனும் மதிப்பிட்ட தொகைக்கு ஈடு செய்தும், அதனை, அனைத்து விதத்திலும், கடனாளரால் திருத்தப்பட்ட மதிப்பீடாகவும் கருதப்படுதல்வேண்டும்.

( 6) பிணையக் கடனாளர், இப்பிரிவின் வகையங்களை நிறைவு செய்யவில்லையானால், ஏதேனும் ஆதாயப்பங்குகள் பெறும் அனைத்திலிருந்தும் அவர் விலக்கப்படுவார். "

7. 1993-ஆம் ஆண்டு கடன் வசூல் சட்டத்தின் தொடர்புடைய வகையங்கள் பின்வருமாறு எடுத்துரைப்பதாவது:

"17. தீர்ப்பாயங்களின் அதிகார வரம்பு அதிகாரங்கள் மற்றும் அதிகார அடைவு- ( 1) வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு நிலுவையிலுள்ள கடன்களை வசூலிப்பதற்கான விண்ணப்பங்களை, அத்தகைய வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து ஏற்றுக்கொண்டு, முடிவு செய்யும் ஒரு தீர்ப்பாயமானது, நிர்ணயிக்கப்பட்ட நாளன்றும், அது முதற்கொண்டும், சட்டவரம்பு, அதிகாரங்கள் மற்றும் அதிகார அடைவு ஆகியவற்றை செயற்படுத்தவேண்டும்.

( 1-அ) உட்பிரிவு ( 1) -க்கு குந்தகமின்றி(அ) ஒரு தீர்ப்பாயமானது, 2016-ஆம் ஆண்டு நொடிப்புநிலை மற்றும் வணிகர் நொடிப்புநிலைச் சட்டத்தின் பகுதி III-இன் கீழ் விண்ணப்பங்களை ஏற்றுக்கொண்டு, முடிவு செய்வதற்கு அதிகாரவரம்பு, அதிகாரங்கள் மற்றும் அதிகார அடைவு ஆகியவற்றை மைய அரசினால் நிர்ணயிக்கப்படும் நாளன்றும், அது முதற்கொண்டும் செயற்படுத்தவேண்டும்

(ஆ) தீர்ப்பாயமானது, அனைத்து மாவட்ட தலைமையகங்களிலும் சுற்றமர்வு மேற்கொள்ள வேண்டும்.

( 2) இச்சட்டத்தின் கீழ் தீர்ப்பாயத்தால் பிறப்பிக்கப் பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்டதாகக் கருதப்படும் உத்தரவிற்கு எதிராக, ஒரு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயமானது, மேல்முறையீடு களை ஏற்றுக்கொண்டு, நிர்ணயிக்கப்படும் நாளன்றும், அது முதற்கொண்டும் அதிகார வரம்பு அதிகாரங்கள், அதிகார அடைவு ஆகியவற்றைச் செயற்படுத்தவேண்டும்.

( 2-அ) உட்பிரிவு ( 2) -க்கு குந்தகமின்றி, மேல்முறையீட்டு தீர்ப்பாயமானது, 2016-ஆம் ஆண்டு நொடிப்புநிலை மற்றும் வணிகர் நொடிப்புநிலைச் சட்டத்தின் பகுதி III-இன் கீழ் நீதிமுறையில் தீர்மானிக்கும் அதிகார ஆயத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவிற்கெதிராக மேல்முறையீடுகளை ஏற்றுக் கொண்டு, மைய அரசினால் நிர்ணயிக்கப்படும் நாளன்றும், அது முதற்கொண்டும் அதிகார வரம்பு, அதிகாரங்கள் மற்றும் அதிகார அடைவு ஆகியவற்றைச் செயற்படுத்தவேண்டும். "

**18. அதிகாரவரம்பு தடை**:-நீதிமன்றம் அல்லது அதிகார ஆயம் எதுவும், (உச்ச நீதிமன்றம் மற்றும் அரசியலமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறுகள் 226 மற்றும் 227-இன் கீழ் அதிகாரவரம்பைச் செயற்படுத்தும் உயர் நீதிமன்றம் நீங்கலாக) பிரிவு 17-இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக, அதிகார வரம்பு, அதிகாரங்கள் அல்லது அதிகார அடைவு எதனையும் கொண்டிருக்கவில்லை அல்லது செயற்படுத்த உரிமையுடையதன்று.

ஆனால், பல மாநில கூட்டுறவு வங்கிகள் எவற்றுக்கும், நிலுவையிலுள்ள கடன்கள் வசூலிப்பு தொடர்பான நடவடிக்கைகள் எதுவும், 2002-ஆம் ஆண்டு (39/2002) பல மாநில கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின் கீழ் 2012-ஆம் ஆண்டு, பிணை வட்டி மற்றும் கடன்கள் வசூல் சட்டங்கள் (திருத்தச் சட்டம்) தொடங்குவதற்கு முன்பே நிலுவையில் இருக்குமானால், அவை தொடரப்பட

வேண்டும்.இச்சட்டப்பிரிவில் அடங்கியுள்ள எதுவும், அத்தகைய தொடக்கத்திற்குப் பிறகு, மேற்கூறிய நடவடிக்கைகளுக்கு பொருந்தாது '
"

"19. தீர்ப்பாயத்திற்கு விண்ணப்பம்-
xxxxxxxxxxxxxx

(19) 2013-ஆம் ஆண்டு (18/2013) நிறுமங்கள் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்டவாறு, ஒரு நிறுமத்திற்கெதிராக வசூல் சான்றிதழ் வழங்கப்பட்டு, அத்தகைய நிறுமமானது மூடப்படும் நிலையில் இருக்குமிடத்து, அத்தகைய நிறுமத்தின் பிணையச் சொத்துகளை விற்ற வருவாயை, 2013-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின் பிரிவு 326-இல் வகை செய்யப்பட்டவாறான அதே முறையிலோ அல்லது அவ்வப்போது நடைமுறையிலுள்ள வேறேதேனும் சட்டத்தின் கீழோ பகிர்ந்தளிக்குமாறு, தீர்ப்பாயமானது, ஒரு உத்தரவின் மூலம் பணிக்கலாம்.
xxx xxx xxx"

"34. சட்டமானது மேலோங்கும் நிலையைப் பெற்றிருத்தல்- ( 1) உட்பிரிவு ( 2) -இன் கீழ் வகைசெய்யப்பட்டவாறன்றி, அவ்வப்போது நடைமுறையில் உள்ள வேறெந்த சட்டத்திலும் அல்லது இச்சட்டத்தைத் தவிர, வேறெந்த சட்டத்தின்படியும், செயல்விளைவுடைய ஆவணம் எதிலும் முரண்பாடாக அடங்கியுள்ள எதுவும் எவ்வாறிருந்தாலும், இச்சட்டத்தின் வகையங்கள் செயல்விளைவைக் கொண்டிருக்கும்.
xxx xxx xxx"

8. (மேற்கண்ட) அலகாபாத் பேங்க் -எதிர்-கனரா பேங்க-இல் பிணையக் கடனாளரான அலகாபாத் வங்கியானது, 1956-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின் கீழ் நிறும நீதிமன்றத்தின் அனுமதிபெற கடமைப்பட்டதா? மற்றும் 1956-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின் கீழ் நிறுமத்தை மூடும் உத்தரவானது பிறப்பிக்கப் பட்டிருக்கின்றநிலையில், கடன்கள் வசூல் சட்டத்தின் கீழ்

தொடங்கப்பட்டிருந்த நடவடிக்கைகளை நிறும நீதிமன்றம் தடைசெய்ய முடியுமா? என்பதைக் குறித்து இந்நீதிமன்றம் விவாதித்துள்ளது. இத்தறுவாயில், இந்நீதிமன்றம், கடன்கள் வசூல் சட்டத்தின் பிரிவு 17 மற்றும் 18- ஐ குறிப்பிட்டு, பிரிவு 17-இன் கீழ் கடன்களை வசூலிப்பதற்கான விண்ணப்பங்களைத் தீர்மானிப்பது தொடர்பாக, தீர்ப்பாயத்தின் அதிகாரவரம்பானது தனிப்பட்டதாகும் எனத் தீர்ப்பளித்துள்ளது. குறிப்பாக, 1956-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டம் உட்பட, பிற சட்டங்களைவிட மேலோங்கியிருக்கும் மேற்படி சட்டத்தின் பிரிவு 34- ஐ பொறுத்தவரை, இரட்டை அதிகாரவரம்பு ஏதும் கருத்திற்கொள்ளப்படவில்லை-காண்க:பத்தி 21 முதல் 23 வரை. மேற்படி தீர்ப்புரையானது மேலும் கூற முற்படுவதாவது:

" 23.கடன்கள் வசூல் சட்டமானது, முரண்படும் ம் அளவிற்கு மற்ற சட்டங்களைவிட மேலோங்குகிறது என பிரிவு 34 ( 1) -இன் வகையங்கள் தெளிவாகக் கூறுகிறது. எங்களுடைய கருத்தில், தீர்ப்பளித்தல் மற்றும் நிறைவேற்றல் என்ற இரண்டிற்குமான தனிப்பட்ட தீர்ப்பாயத்தின் விதியமைப்பு என்பது, கடன்களை வேறு எந்த விதத்திலும் வசூலிப்பதினின்று முற்றிலும் மாறுபட்ட நடைமுறையைக் கொண்டதாகும்."

xxxxxxxxxxxxxxx

"25. இவ்வாறாக, பொறுப்புகளைத் தீர்மானித்தல் மற்றும் சான்றிதழை நிறைவேற்றுவதன் மூலம் தொகையை வசூலித்தல் என்பன தீர்ப்பாயம் மற்றும் வசூல் அலுவலரின் தனிப்பட்ட அதிகாரவரம்பிற்கு உட்பட்டவையாகும். சட்டத்தில் வகை செய்யப்பட்டவாறன்றி, பொறுப்பு மற்றும் வசூலித்தல் தொடர்பான பிரச்சனைகளுக்குள் சென்று உரிமையியல் நீதிமன்றத்திற்கு கீழான வேறேதேனும் நீதிமன்றமோ அல்லது அதிகாரியோ அல்லது நிறும நீதிமன்றமோ ஆராயமுடியாது. அதற்கிணங்க, வாதக்கூறு 1 முடிவு செய்யப்படுகிறது. '

(அசல் வலியுறுத்தலிலுள்ளபடி)

" 9. கடன்கள் வசூல் சட்டமானது, 1956-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின் பிரிவுகள் 442, 537 மற்றும் 446-இன் வகையங்களைவிட மேலோங்குகிறதா? என்பதற்கு பதிலளிக்கையில், ஒரு சிறப்பு சட்டமான கடன்கள் வசூல் சட்டமானது, மிகவும் பொதுவான சட்டமான 1956-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின் மேற்கூறிய வகையங்களைவிட இன்றியமையாதவகையில் மேலோங்குகிறதென்றும், இந்நீதிமன்றம் முடிவு செய்தது. மற்றபடி, இவ்விரு சட்டங்களும் சிறப்பு சட்டங்களாக கருதப்படுமானால், கடன்கள் வசூல் சட்டமானது காலத்தால் பிந்தையது என்பதால், பிரிவு 34-இல் அடங்கியுள்ள தடையுறுத்தாக் கூறுடன் இணைந்து, கடன்கள் வசூல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அளவிற்கு, மேற்படி சட்டமானது மேலோங்கியிருக்கும். பின்னர், இந்நீதிமன்றம் முடிவு செய்ததாவது:

> "50. மேற்படி காரணங்களுக்காக, பிரிவு 17-இன் கீழ் தீர்ப்பளித்தல் மற்றும் பிரிவு 25-இன் கீழ் சான்றிதழை நிறைவேற்றல் என்பதான நிலையில், வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு செலுத்தவேண்டிய கடன் தொடர்பாக, கடன்கள் வசூல் சட்டமானது, தீர்ப்பாயத்திற்கும் மற்றும் வசூல் அலுவலருக்கும் தனிப்பட்ட அதிகாரவரம்பை அளிக்கிறது மற்றும் அதில், 1956-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின் பிரிவு 442 உடன் பிரிவு 537 அல்லது 446-இன் கீழ், நிறும நீதிமன்றம் குறுக்கிடமுடியாது. கடன்கள் வசூல் சட்டத்தின் கீழ் வசூலிக்கப்பட்ட பணம் தொடர்பாக, வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் பிற கடனாளர்களுக்கிடையே முன்னுரிமை தொடர்பான பிரச்சனையானது, கடன்கள் வசூல் சட்டத்தின் கீழும், நிறுமங்கள் சட்டத்தின் பிரிவு 19 (19) உடன் பிரிவு 529-க்குட்பட்டும், தீர்ப்பாயத்தால் முடிவு செய்யப்படுமேயன்றி, வேறு விதத்திலல்ல. மேற்கூறிய அளவிற்கு 1993-ஆம் ஆண்டு கடன்கள் வசூல் சட்டத்தின் வகையங்கள், 1956-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்ட வகையங்களுக்கு முரணாகவும், பிந்தைய சட்டமானது, முந்தைய சட்ட வகையங்களுக் வளைந்துகொடுக்கவேண்டியுமுள்ளது. இந்நிலைப்பாடானது, கடனாளி

நிறுமத்தை மூடக்கோரும் மனுவானது நிலுவையிலுள்ள பொழுதிலும் மற்றும் முடும் உத்தரவானது பிறப்பிக்கப்பட்ட பின்னர்தான் பயனுள்ளதாக இருக்கும். 1993-ஆம் ஆண்டு கடன்கள் வசூல் சட்டத்தின் கீழ் நடவடிக்கைகளை துவங்கவோ அல்லது தொடரவோ, நிறும நீதிமன்றத்தின் அனுமதி தேவையில்லை. அதற்கிணங்க, 2 மற்றும் 3-ஆவது வாதக்கூறுகள் மேல்முறையீட்டாளருக்காதரவாகவும், எதிர்மேல்முறையீட்டாளருக்கெதிராகவும் முடிவு செய்யப்படுகின்றன. "

10. மேற்கூறிய சட்டக்கூறானது, கடன்கள் வசூல் சட்டத்தின் கீழ், நடவடிக்கையை தொடங்கவோ, தொடரவோ அல்லது பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளைச் செயற்படுத்தவோ, நிறும நீதிமன்றத்தின் அனுமதி தேவையில்லை என்னும் சூழலிலேயே வழங்கப்பட்டதாகும் என்பது முதன்மையாகக் குறிப்பிடத்தக்கதாகும். 1956-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டமானது, கடன்கள் வசூல் சட்டம் என்ற அளவிலேயே, வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு நிலுவையான கடன்கள் வசூல் சட்டம் மற்றும் 1956-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்திற்கிடையே முரண்படுமளவுக்கு மேலோங்கியுள்ளது என்பதே முக்கியமாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

11. 1956-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின் பிரிவு 433 (ஈ) மற்றும் 434-இன் கீழ் நிறுமத்தை மூடத் தொடங்கப்பட்ட நடவடிக்கையானது, கடன் செலுத்த வற்புறுத்தக்கோரும் வழிமுறையல்ல என்பது அறுதியிடப்பட்ட சட்டமாகும்.**அமல்கமேடட் கமர்ஷியல் டிரேடர்ஸ் பிரைவேட் லிமிடெட்-எதிர்-ஏ.சி.கே.கிருஷ்ணசாமி மற்றும் பலர்** (1965) 35 கம்பெனி கேசஸ் 456 (எஸ்.சி.) என்ற வழக்கில் இந்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதாவது:

"13. நிறுமத்தைப் பொறுத்தவரையில், உண்மையான பிரச்சனையான நிறுமத்தை முடக்கோரும் மனுவானது, கடன் செலுத்த வற்புறுத்தக் கோரும் ஒரு சட்டப்பூர்வமான வழிமுறையல்ல என்பது நன்கு அறுதியிடப்பட்டுள்ளது. நிறுமத்தை முடக்கோரும் உத்தரவுக்காக உண்மையை மறைத்து, ஒரு மனுவானது தாக்கல் செய்யப்பட்டு,

உண்மையில் நெருக்கடிக்குள்ளாக்குமானால் அது தள்ளுபடி செய்யப்படும்.அச்சூழ்நிலைகளில், நீதிமன்றக் கட்டளையை அவமதிக்கும் தவறைச் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்படலாம். "

சட்டத்தின் இக்கூற்றானது, பின்பு பல தீர்ப்புரைகளில் பின்பற்றப்பட்டுள்ளன, அவற்றுள் ஒன்று **எம்/எஸ்.இபா உெறல்த் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் - எதிர்-எம்/எஸ்.இன்போ-ட்ரைவ் சிஸ்டம்ஸ் எஸ்டிஎன்.பிஉெறச்டி.,** (2010) 10 எஸ்.சி.சி. 553 (பத்தி 21-இல்) ஆகும்.

12.எனினும், இந்நீதிமன்றத்தின் அடுத்துவந்த தீர்ப்புரையில் அதே கற்றறிந்த மூவரமர் நீதியராய நீதியரசர்கள், உறரிநகர்உஷுகர் மில்ஸ் கம்பெனி லிமிடெட் -எதிர்-எம்.டபிள்யூ.பிரதான், (1966) 3 எஸ்.சி.ஆர். 948 என்னுமொரு வழக்கில் சுட்டிக்காட்டி, பின்வருமாறு தீர்ப்பளித்ததாவது:

"5. .....நிறுமத்தை முடக்கோரி சொத்துப்பேணுநரால் தாக்கல் செய்யப்படும் மனுவானது, நிறுமத்திடமிருந்து கூட்டு குடும்பத்திற்கு வரவேண்டிய தொகையை வசூலிக்கும் முறையல்ல எனக் கூறமுடியுமா? பாமர்ஸ் கம்பெனி பிரிசிடென்ட்ஸ், பகுதி II, 1960 பதிப்பு, பக்கம் 25-இல் பின்வரும் பத்தியிலிருந்து தெரிவதாவது:

"நிறுமத்தை மூடக்கோரும் ம் மனுவானது, நியாயமான கடனைச் செலுத்துவதற்கு வற்புறுத்தும் முற்றிலும் ஏற்றதொரு முறையான பரிகாரமாகும்.அது, கடன்களைச் செலுத்த முடியாத நிறுமத்திற்கெதிராக, நீதிமன்றம் கடனாளருக்கு தரும் ஒரு நிறைவேற்றல் வழிமுறையாகும். "

இக்கருத்தானது, போவ்ஸ் எதிர்-உேறாப் லைப் இன்ஷுரன்ஸ் அண்டு கேரன்டி கம்பெனி [ (1865) II உெறச்.எல்.சி.388].ரீ ஜெனரல் கம்பெனி பார் புரமோஷன் ஆஃப் லேண்ட் கிரெடிட் [ (1870) எல்.ஆர் .5 சிஉெறச்.டி. 380] மற்றும் ரீ நேஷனல் பெர்மனென்ட் பில்டிங் சொசைட்டி [ (1869) எல்.ஆர்.5 சிஉெறச்.டி. 309] ஆகிய வழக்குகளின் தீர்முடிவுகளால் ஆதரிக்கப்பட்டுள்ளது. நிறுமத்தை மூடும் உத்தரவானது

" நிறுமத்தைப் பொறுத்தவரையில் அதனுடைய கடனை வசூலிப்பதற்கான சாதாரண நடைமுறைக்குரிய சாதாரண மாற்று வழியல்ல என்பது உண்மைதான் என்றாலும், அது நேர்மையான ஒரு நிறைவேற்றல் முறையேயன்றி வேறல்ல ..... "

13. நிறுமத்தை மூடும் மனுவானது, கடனை நேர்மையாகத் தீர்க்கும் ஒரு முறை என இந்நீதிமன்றம் கூறியுள்ளது உண்மைதான் என்றாலும், கடனாளருக்கு நிலுவையான கடன்களை வசூலிப்பதற்கான சாதாரண நடைமுறைக்கு, நிறுமத்தை மூடும் உத்தரவானது ஒரு சாதாரண மாற்றுவழியல்ல எனக் கூறி அங்கீகரிக்கப்படுகிறது. மேற்கூறப்பட்ட **அமால்கமேடட் கமர்ஷியல் டிரேடர்ஸ் மற்றும் உறரிநகர் ஷுகர் மில்ஸ்** என்ற இரு வழக்குகளின் தீர்ப்புரைகளிலுமே, நிறுமத்தை மூடும் நடவடிக்கையானது, கடன்களை வசூலிப்பதற்காக குறிப்பிடப்பட்ட நடவடிக்கையல்ல என்னும் பொருண்மையை அங்கீகரித்துள்ள தாகையால், கடன்கள் வசூல் சட்டத்தின் பிரிவு 17 உடனிணைந்த பிரிவு 18-இன் கருத்தின்படி உள்ளடக்கப் படாது என நாங்கள் கருதுகிறோம். அது, 1956-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின் கீழ் நிறுமத்தை மூடும் நடவடிக்கைக்கு வரும்பொழுது, அந்த நடவடிக்கையானது, வங்கிகளுக்கு நிலுவையான " கடன்களை வசூலிப்பதற்கான " தாக இல்லாததையடுத்து, 1956-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின் கீழ் நிறுமத்தை மூடும் நடவடிக்கைகளுக்கு கடன்கள் வசூல் சட்டத்தின் பிரிவு 18 உடனிணைந்த பிரிவு 34-இன் கீழான தடையானது பொருந்தாது.

14. இப்பொருண்மைக்கூறு வகையில் பம்பாய் உயர்நீதிமன்றத்தின் நீதியர் ஈராயம், வைரல் பிலமென்ட்ஸ் லிமிடெட்-எதிர்-இண்டஸ் இந்த பேங்க் லிமிடெட் (2001) 3 எம்.ஏ.டெறச்.எல்.ஜெ. 552 என்ற வழக்கில், இந்த நீதிமன்றத்தின் (மேற்கண்ட) அலகாபாத் பேங்க்-எதிர் கனரா பேங்க என்ற வழக்கின் தீர்ப்புரையை மிக நுட்பமாக ஆராய்ந்த பின்னர், இச்சிறந்த முடிவை எட்டியுள்ளது. நாங்கள் பம்பாய் உயர்நீதிமன்றத்தின் மேற்கூறிய தீர்ப்புரையில் அடங்கியுள்ள காரண விளக்கத்தை ஏற்கிறோம்.

15. எனினும், மேல்முறையீட்டாளர்களுக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. கே. பரமேஷ்வர், **இராஜஸ்தான் ஸ்டேட் பைனான்ஷியல் கார்ப்பரேஷன் -எதிர் அபிஷியல் லிக்விடேட்டர்** (2005) 8 எஸ்.சி.சி. 190 என்ற வழக்கினையும் மற்றும் மேற்கூறிய தீர்ப்புரையின் பத்தி 18-ஐயும் சார்ந்துநின்றார், குறிப்பாக, பத்தி 18 பின்வருமாறு எடுத்துரைப்பதாவது:

> "18. மேற்படி விவாதத்தின் அடிப்படையில் சட்ட நிலைப்பாட்டை இவ்வாறாக தொகுத்துரைப்பது முறையாக இருக்கும் என நாங்கள் நினைக்கின்றோம்:
>
> (i)1993-ஆம் ஆண்டு வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு நிலுவையான கடன்கள் வசூல் சட்டத்தின் கீழ் செயல்படும் கடன்கள் வசூல் தீர்ப்பாயமானது, ஒரு நிறுமம் மூடப்படுவதா யிருந்தாலுங்கூட, அதனுடைய வசூல் அலுவலரின் மூலம் நிறுவனக் கலைப்பு அலுவலருக்கோ அல்லது நிறும் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட கலைப்பு அலுவலருக்கோ அறிவிப்புக் கொடுத்து, அவருடைய கருத்தைக் கேட்டபின்னர், விற்பனைக்கு உத்தரவிடவும், கடனாளியின் சொத்தை விற்கவும் உரிமையுடையதாகும்.
>
> (ii) மாநில நிதிக் கழகச் சட்டத்தின் பிரிவு 31-இன் கீழ் விண்ணப்பத்தை ஏற்கும் மாவட்ட நீதிமன்றமானது, நிறுவனக் கலைப்பு அலுவலருக்கோ அல்லது நிறும் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட கலைப்பு அலுவலருக்கோ அறிவிப்பு கொடுத்து, அவருடைய வாதத்தைக் கேட்ட பின்னரே மூடப்படும் நிலையிலுள்ள கடனாளி நிறுமத்தின் சொத்துகளை விற்பனைக்கு கொண்டுவரும் அதிகாரத்தைப் பெறும்.
>
> (iii) மாநில நிதிக் கழகச் சட்டத்தின் பிரிவு 29-இன் கீழ் செயல்படும் நிதிக் கழகமானது, மூடும் நிலையிலுள்ள கடனாளி நிறுமத்தின் சொத்துகளை விற்கவோ அல்லது வேறு வகையில் மாற்றம் செய்யவோ விழையுமானால், மேற்படியான அதிகாரத்தை, நிறும நீதிமன்றத்திடம் உரிய அனுமதி பெற்ற பின்னரே செயல்படுத்த முடியும்

மற்றும் விற்பனை, தொடக்க விலை நிர்ணயம் அல்லது ஒதுக்கீட்டு விலையை நிர்ணயித்தல், விற்பனையை உறுதி செய்தல், விற்பனைத் தொகையை வைத்திருத்தல் மற்றும் அவற்றை நிறுமங்கள் சட்டத்தின் பிரிவு 529- அ மற்றும் 529-இன்படி கடனாளர்களுக்கிடையே பகிர்ந்தளித்தல் ஆகியவற்றுடன் தொடர்புடைய நிறுவனக் கலைப்பு அலுவலரைப் பொறுத்தவரை, அவர் அந்நீதிமன்றத்தால் அளிக்கப்பட்ட கட்டளைப்படி செயல்படவேண்டும்.

(iv) 1993-ஆம் ஆண்டு வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு நிலுவையான கடன்கள் வசூல் சட்டத்தின கீழோ அல்லது மாநில அரசு நிதிக் கழக சட்டத்தின கீழோ, நடவடிக்கைகள் செயல்பாட்டுக்கு வராத நிலையில், சம்பந்தப்பட்ட கடனாளர், மூடப்படும் நிலையிலுள்ள நிறுமத்தின் சொத்துகளை பகிர்ந்தளித்தல் தொடர்பான நிறுமச் சட்டத்தின் தொடர்புடைய வகையங்களுக்கேற்ப பிணையங்களை பணமாக்குவது தொடர்பான, உரிய உத்தரவு களுக்காக நிறும நீதிமன்றத்தை அணுகவேண்டும். "

உண்மையில், கடன் வசூல் தீர்ப்பாயத்தின் கீழான நடவடிக்கைகளும் 1956-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின் கீழான நிறுமத்தை மூடும் நடவடிக்கைகளும் ஒன்றோடொன்று இணையாக செயல்படமுடியும் என்பதையே, பத்தி 18-இன் (i) மற்றும்(iv) தெரிவிக்கின்றன. அதனால்தான், கடன்கள் வசூல் சட்டத்தின் கீழ் செயல்படும், கடன் வசூல் தீர்ப்பாயமானது, ஒரு நிறுமம் மூடப்படும் நிலையிலிருந்தாலுங்கூட நிறுவனக் கலைப்பு அலுவலருக்கோ அல்லது நிறும நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்ட கலைப்பு அலுவலருக்கோ அறிவிப்பு கொடுத்து, அவருடைய கருத்தையும் கேட்ட பின்னர், கடனாளி சொத்துகளை விற்பனை செய்யவோ, விற்பனைக்கு உத்தரவிடவோ உரிமையுடையதாகும் என பத்தி 18 (i) கூறுகிறது.

16. இதே கருத்தினைக் கொண்டதே இந்த நீதிமன்றத்தின் **அபிஷியல் லிக்விடேட்டர் -எதிர்-அலகாபாத் பேங்க்** (2013) 4 எஸ்.சி.சி. 381 என்ற

வழக்கின் தீர்ப்புரையாகும், அதில் இந்நீதிமன்றம் கீழ்க்காணுமாறு தீர்ப்பளித்துள்ளதாவது:

> **"24**. நிறுவனக் கலைப்பு அலுவலருடன் இணைந்தே, கடன் வசூல் தீர்ப்பாயத்தினால் விற்பனையானது நடத்தப்படவேண்டும் என்பது, மேற்படி தீர்வறிக்கை களிலிருந்து தெளிவாகத் தெரிகிறது.தற்பொழுதைய முரண்பாடானது கிரையத்தோடு மட்டுமே தொடர்புற்றிருப்பதால், பகிர்ந்தளித்தல் தொடர்பாக நாங்கள் எதையும் கூறப்போவதில்லை என்பதை நாங்கள் தெளிவுபடுத்த விழைகின்றோம்.எனினும், பகிர்ந்தளித்தலை 1956-ஆம் ஆண்டு சட்டப் பிரிவு 529- அ-க்குட்பட்டு செயற்படுத்தப்படவேண்டும் என கடன் வசூல் சட்டப்பிரிவு 19 (19) -இன் கீழ் தெளிவாக கூறப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கதாகும்.அவ்வாறு கூறுவதன் நோக்கம் யாதெனில், இச்சட்டமே முழுநிறைவானதாகும் மற்றும் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு நிலுவையான கடன்களை வசூலிப்பதற்காக, சொத்துகளை விற்கும்பொருட்டு தீர்ப்பாயமானது தனிப்பட்ட அதிகாரவரம்பைக் கொண்டுள்ளது. "
>
> xxxxxxxxxxxxxxx
>
> **"31.** வங்கிகள் அல்லது நிதி நிறுவனங்களால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நடவடிக்கையில் சொத்துகளை விற்பதற்கு தீர்ப்பாயமானது தனிப்பட்ட அதிகாரவரம்பைக் கொண்டுள்ளது என்பதையும், ஆனால், ஏலம் மற்றும் விற்பனையின் பொழுது, அது நிறுவனக் கலைப்பு அலுவலரை இணைத்துக்கொள்ளவேண்டும் என்பதையும், மேற்படி ஆய்வானது, தெளிவாக விளக்குகிறது. மேற்படி கோட்பாடானது, பிரவீன் காடா -எதிர்-சென்ட்ரல் பேங்க் ஆஃப் இந்தியா [ (2013) 2

எஸ்.சி.சி. 101:(2013) 1 எஸ்.சி.சி. (சிவில்) 988] என்ற வழக்கிலும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

**32.** நிறுவனக் கலைப்பு அலுவலர் இணைக்கப் பட்டுவிட்டால், அவர், கடன் வசூல் சட்டத்தின் கீழ் வனையப்பட்ட விதிகளுக்குட்பட்டு ஏலம் நடத்தி, உரியத் தொகையைப் பெறுவதும், ஏலம் நடத்துவதில் முறைகேடு ஏதும் நிகழாமல் பார்த்துக்கொள்ளும் கடமையிருக்கிறது என்பதையும் சொல்லத் தேவையில்லை. "

17. மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞரால் எழுப்பப்பட்ட இரண்டாம் வாதக்கூறுயாதெனில், 1956-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தையும், 1920-ஆம் ஆண்டு மாகாண நொடிப்புநிலைச் சட்டத்தையும் சேர்த்துப் படித்தால், பிணையக் கடனாளர், நிறுமத்தை மூடக்கோரும் மனுவைத் தாக்கல் செய்யும் சமயத்தில், தான் பிணையத்தைக் கைவிட்டுவிட்டதாகக் கூறவேண்டும். இல்லாவிடில், அத்தகைய நிறுமத்தை மூடக்கோரும் மனுவானது நிலைக்கத்தக்கதல்ல என்பதை தெளிவுப்படுத்துகிறது. டெறக்டே மற்றும் கோலே லிமிடெட் எதிர்-ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா ஐ.எல்.ஆர் .1987 கர்நாடகா 2673 என்ற வழக்கில், கர்நாடக உயர் நீதிமன்றத்தின் (அன்றைய) அறிவார்ந்த தனியமர் நீதியரசர் திரு. வெங்கடாச்சலையா அவர்கள் இவ்வாதக்கூறைக் குறிப்பிட்டு, பின்வருமாறு தீர்ப்பளித்ததாவது:

"12. வாதக்கூறு (அ) குறித்து:

பிணையக் கடனாளரான வங்கியானது, தன்னுடைய பிணையைக் கைவிடுவதா?அல்லது அதனை, 1920-ஆம் ஆண்டு மாகாண நொடிப்புநிலை சட்டத்தின் பிரிவு 9 (2) -ஆல் வேண்டுறுத்தப் படுகின்றவாறு மதிப்பிடுவதா?என்பதை தேர்ந்தெடுக்காமல், நிறுமத்தை முடக்கோரும் மனுவைத் தாக்கல் செய்ய முடியாது என்பது வாதமாகும்.சட்டத்தின் பிரிவு 9 ( 2) -

இன் நொடிப்புநிலை விதிகள் சட்டத்தின் பிரிவு 529 ( 1) மூலம் ஈர்க்கப்படுகின்றன என வலியுறுத்தப்படுகிறது.

மாகாண நொடிப்புநிலைச் சட்டத்தின் பிரிவு 9 ( 2) தெரிவிப்பதாவது:

" மனு தாக்கல் செய்யும் கடனாளர், ஒரு பிணையக் கடனாளரென்றால், கடனாளியானவர், நொடித்தவராக தீர்ப்பளிக்கப்படும்பட்சத்தில், பிற கடனாளர்களின் நலனுக்காக தன்னுடைய பிணையக் கைவிட அல்லது பிணையின் மதிப்பைக் கணக்கிட்டு தெரியப்படுத்த விரும்புகிறார் என்பதை மனுவில் கூறவேண்டும்.பிந்தைய நேர்வில், அவர், அவ்வாறு கணக்கிடப்பட்ட மதிப்பைக் கழித்த பின்னர், அவருக்கு கொடுக்கவேண்டிய எஞ்சிய கடன் தொகைக்கு, பிணையமற்ற கடனாளர்களைப் போன்றே, அவர் மனு தாக்கல் செய்யும் கடனாளராக ஏற்றுக் கொள்ளப்படுவார். "(அசலிலுள்ளவாறு வலியுறுத்தல்)

**13.** பிணையக் கடனாளர், நொடிப்புநிலைக்கு வெளியே இருக்கலாம்; ஆனால், அவர் கடனாளரின் நிறுமத்தை மூடக்கோரும் மனுவைத் தாக்கல் செய்வாரானால், அவர் தன் மனுவில், பிற கடனாளர்கள் அங்கத்தினரின் நலனுக்காக பிணையைக் கைவிட விரும்புகிறார் என்பதையோ அல்லது பிணையின் மதிப்பைக் கணக்கிட்டு தெரியப்படுத்துவார் என்பதையோ கூறவேண்டும். நாங்கள் மரியாதை நிமித்தமாக அவ்வாறு கூறுவோமானால், மிக சரியாகவே, நிறுமத்தை மூடக்கோரும் மனுவைத் தாக்கல் செய்வதற்கு இந்த நொடிப்புநிலை சட்ட விதி ஈர்க்கப்படாது என்ற கருத்தை அறிவார்ந்த நிறும் நீதிமன்ற நீதிபதி எடுத்துள்ளார்.

**14.** திரு. ஷெட்டி அவர்கள், வணிகர் நொடிப்பு மற்றும் நிறுமத்தை மூடுதல் என்ற இரண்டிலும், சட்டம் ஒன்றேயாகும் மற்றும் மனு தாக்கல் செய்யும் கடனாளர், பிணையக் கடனாளராயின், அவர், பிரிவு 9 ( 2) -

இன் விதியைப் பின்பற்றவேண்டும் எனக் கூறுகிறார். அவர், எம்.கே.ரங்கநாதன் -எதிர் மெட்ராஸ் அரசு [ஏ.ஐ.ஆர்.1955 எஸ்.சி. 604] மற்றும் உறன்ஸ்ராஜ் -எதிர்-நிறுவனக் கலைப்பு அலுவலர்கள், டேராடூன் முசௌரி எலக்டிரிக் டிரேடிங் கம்பெனி லிமிடெட் (ஏ.ஐ.ஆர்.1929 அலகாபாத் 353] -ஐ சார்வுற்றார். சார்வுறப்பட்ட ரங்கநாதன் வழக்கு (ஏ.ஐ.ஆர்.1955 எஸ்.சி .604] -இன் கருத்துரையாவது.

> " பிரிவு 229, பிணையக் கடனாளரை, பொதுவாக நிறுமத்தை மூடக்கோரும் நடவடிக்கைக்கு அப்பாற்பட்டவராக அங்கீகரிக்கிறது, ஆனால், தன்னுடைய கடனை நிரூபிப்பதற்கு, நிறுமத்தை மூடக்கோரும் நடவடிக்கைகளின் பயனைப் பெற விரும்புமிடத்து, அவர், மாகாண தலைநகர்கள் நொடிப்புநிலை சட்டம் அல்லது மாகாண நொடிப்புநிலை சட்டத்தின் கீழ் நொடிப்புநிலை ஏற்படும் சந்தர்ப்பத்தில் என்ன செய்ய இயலுமோ, அதே முறையிலேயே நிறுமத்தின் சொத்துகளை மதிப்பிட்டு, அவற்றை சரிசம வீதப்படியான பங்காக பகிர்ந்தளிப்பதற்கு இயல்விக்கிறது. "

ஹன்ஸ்ராஜ் [ஏ.ஐ.ஆர்.1929 அலகாபாத் 353] என்ற வழக்கில் கருத்துரைக்கப்பட்டதாவது:

> " ....எனவே, மாகாண நொடிப்புநிலை சட்டப்பிரிவு எதிலும் அடங்கியுள்ள விதிகளும், இச்சட்டத்தின் கீழ் வனையப்படும் விதிகள் ஏதேனுமிருப்பினும் மற்றும் நொடிப்புநிலை சட்ட நடவடிக்கைகளில் உரியவகையில் நிலைநாட்டப்பட்ட நடைமுறை விதிகள் எவையும், பிரச்சனைக்குரிய வழக்கிற்காக, நிறுமங்கள் சட்டத்திலேயே ஏதேனும் ஏற்கெனவே வகைசெய்யப்பட்டிருந்தாலன்றி அல்லது அதனைக் கொண்டுவர முன்மொழியப்படும் விதியுடன் முரண்பட்டிருந்தாலன்றி, அவை

நிறுமங்கள் சட்டத்தில் கொண்டு வரப்படுகின்றன என நான் கருதுகிறேன்.

"எங்களுடைய கருத்தில், இக்கருத்தறிவிப்புகள், திரு. ஷெட்டி அவர்களின் கருத்தை இனிமேலும் ஆதரிப்பதாக இல்லை. 'சட்ட'த்தின் பிரிவு 529 ( 1) " பிணைய மற்றும் பிணையமற்ற கடனாளர்களுக்கு உரிய உரிமைகள் " தொடர்பாக நிறுமத்தை மூடுவதற்கு, நொடிப்புநிலை விதிகளை ஈர்க்கிறது மற்றும் அவ்வாறு ஈர்க்கப்பட்ட இவ்விதிகள், இவ்விரு வகையான கடனாளர்களுக்கிடையே எழும் பிரச்சனைகளின் வரம்புக்குட்படுகிறது. "சட்டப் " பிரிவுகள் 528 மற்றும் 529, கோரிக்கைகளின் நிரூபணமும், தரவரிசையும் என்னும் அத்தியாயத்தில் உள்ளன மற்றும் அவை, கடன்களின் நிருபணம் மற்றும் பிணைய மற்றும் பிணையமற்ற கடனாளர்களின் உரிமைகளைக் குறித்து கையாளுகின்றன.பிரிவு 529 ( 2) -ஆனது எதிர்பாராத நிகழ்விற்கு வெளிப்படையாக கருத்து தெரிவிப்பதைப் பொறுத்தவரையில், பிணையக் கடனாளர், தன்னுடைய பிணையை பணமதிப்பாக்க முனைவாரானால், அவர், கலைப்பு அலுவலரால் செலவழிக்கப்பட்ட தொகையைச் செலுத்த வேண்டும் எனவும் வகைசெய்கிறது; குறிப்பாகச் சொன்னால், இது, திரு ஷெட்டி அவர்களால் வாதிடப்பட்ட பொருள்விளக்கத்தை நிராகரிக்கிறது. 'சட்டப் ' பிரிவு 529 ( 1) -இல் உள்ள " நொடிப்பு நிறுமத்தை மூடுவதில் " என்னும் சொற்கள், நிறுமத்தை முடிய பின்பான நிலை குறித்த தெளிவான குறிப்புரையைக் கொண்டுள்ளது.

நொடிப்புநிலையின் இவ்விதியானது, கடன்களை நிரூபிக்கும் வழக்கில் நிறுமத்தை முடுவதையே ஈர்க்கின்றது என்னும் கருத்து கவனிக்கத்தக்கதாகும்.அது, நிறுமத்தை முடுவதற்கான உத்தரவானது பிறப்பிக்கப்பட்ட கட்டத்திற்கு அடுத்ததாகும்.பிணையக் கடனாளர் என்பவர் வேறெவரேனும் போன்றே, ' சட்ட'த்தின் பிரிவு 439 ( 2) -இன் கீழ் நிறுமத்தை முடக்கோரும் மனுவைத் தாக்கல் செய்ய

உரிமையுடையவராவார்.நொடிப்புநிலை சட்டத்தின் கீழ் தீர்ப்பளிக்கக்கோரி மனு தாக்கல் செய்வதற்கு பிணையக் கடனாளரின் உரிமை தொடர்பான சட்டமானது, நிறுமத்தை மூடக்கோரி மனு தாக்கல் செய்யும் பிணையக் கடனாளரின் உரிமையிலிருந்து வேறுபட்டதாகும் ..... "

திரு. பரமேஸ்வர் சட்டத்தின் இக்கூற்றினை ஆட்சேபித்து, 1956-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின் பிரிவு 441- ஐ குறிப்பாக, உட்பிரிவு ( 2) - ஐ குறிப்பிட்டு, நிறுமத்தை மூடுதல் என்பது நிறுமத்தை மூடுவதற்கான மனு தாக்கல் செய்யப்படும்பொழுதே தொடங்கிவிடுவதாகக் கருதப்படுதல் வேண்டும் என்னும் பொருண்மையை, இத்தீர்ப்புரை விட்டுவிட்டது எனக் கூறி, இது இவ்வாறானால், பிணையக் கடனாளர், எந்த நிலையில் தனது பிணையைக் கைவிடவேண்டுமென்றால் நிறுமத்தை மூடக்கோரும் மனுவைத் தாக்கல் செய்யும் நிலையிலேயேதான் கைவிடவேண்டும் என்பதாகும்.நாங்கள் இதனை ஒப்புக்கொள்ள முடியாததற்கு வருந்துகிறோம்.அனைத்திற்கும் மேலாக, 1956-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின் பிரிவு 439-இன் கீழ், பிணையக் கடனாளர், தன்னுடைய பிணையை கைவிடவோ அல்லது விட்டுவிடவோ என்ற எந்தத் தேவையுமின்றி, அதன் நிறுமத்தை மூடக்கோரும் மனு நிலைநிறுத்தத்தக்கதாகும் என்பதைக் கவனிப்பது முக்கியமாகும்.இது, 1920-ஆம் ஆண்டு மாகாண நொடிப்புநிலைச் சட்டப் பிரிவு 9 ( 2) -க்கு மாறுபட்டதாகும், அது, பின்வருமாறு எடுத்துரைப்பதாவது:

"9. கடனாளர், எந்த நிபந்தனைகளின்பேரில் மனு தாக்கல் செய்யலாம்.-

xxxxxxxxxxxxxxx

( 2) கடனாளியானவர் நொடிப்புநிலை அடைந்தவர் என தீர்ப்பளிக்கப்படும்பட்சத்தில், மனு தாக்கல் செய்யும் கடனாளர், பிணையக் கடனாளராயின் தன்னுடைய பிணையை பிற

கடனாளர்களின் நலனுக்காக, கைவிடுகிறாரா?அல்லது பிணையின் மதிப்பைக் கணக்கிட்டு கூறுகிறாரா?என்பதை, தன்னுடைய மனுவில் கூறவேண்டும்.பிந்தைய நிலையில், அவருடைய பிணையை மதிப்பிட்டு அத்தொகையை கழித்த பின்னர் உள்ள மீதக் கடன் தொகைக்கு, பிணையமற்ற பிற கடனாளர்களைப் போன்றே, அவருடைய மனுவானது அனுமதிக்கப்படும். "

எது தெளிவாகத் தெரிகிறதென்றால், 1920-ஆம் ஆண்டு மாகாண நொடிப்புநிலைச் சட்டத்தின் பிரிவு 9 ( 2) -க்கு 1956-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின் பிரிவு 439-இல், தொடர்புடைய வகையம் இல்லை என்பதேயாகும்.பொருண்மையின் கருத்துப்படி, 1920-ஆம் ஆண்டு மாகாண நொடிப்புநிலைச் சட்டத்தின் பிரிவு 47-ஆனது, 1956-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டப்பிரிவு 529-இல் குறிப்பிடப்படும் நிலையானது, உத்தரவு அளிக்கப்படும் நிலையில்தான் வருகிறது.உண்மையில், 1956-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின் பிரிவு 529 (1) (இ) -ஆனது, " நொடித்தவராக தீர்ப்பளிக்கப்பட்ட நபர்களின் சொத்து தொடர்பாக " நொடிப்புநிலைச் சட்டத்தின் கீழான பிணையக் கடனாளரின் உரிமையை குறிப்பாக சுட்டிக்காட்டுகிறது.1956-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின் பிரிவு 529 ( 1) ( இ) -இன் தெளிவான சொல்நடையானது, 1920-ஆம் ஆண்டு மாகாண நொடிப்புநிலைச் சட்டப்பிரிவு 47- ஐ மட்டுமே ஈர்க்கிறதேயன்றி, மேல்முறையீட்டாளர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞர் எங்கள் முன்பு வாதுரைத்தது போன்று, பிரிவு 9 ( 2) -ஐ அல்ல என்பதை தெளிவுபடுத்துகிறது.1956-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின் பிரிவு 441 (2) -இன் மீது சார்ந்துநிற்பது என்பது மேலுமொரு காரணத்திற்கான தவறாக உள்ளது என்பதையும் நாங்கள் கூறுகிறோம்.பிரிவு 441 (2) -ஐ, பிரிவு 441 (1) -உடனிணைத்து படிக்கவேண்டும்.அவ்வாறு படித்தால், உட்பிரிவு ( 2) -ஐ இயற்றுவது தேவையாகிறது என்பதை தெளிவுபடுத்துகிறது. ஏனெனில், தன்னிச்சையாக நிறுமத்தை

மூடக்கோரும் மனுவானது, தீர்ப்பாயத்தின் முன்பாக தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னதாகவே தீர்மானம் நிறைவேற்றும் சமயத்திலேயே அதாவது, நிறுமத்தை தன்னிச்சையாகவே மூடப்படுவதற்கான தீர்மானம் நிறைவேற்றுகிறபொழுதே, செயற்படத்தொடங்கிவிட்டதாக கொள்ளப்படவேண்டும். அதற்குமாறாக, " வேறேதேனும் நேர்வுகளில், " அதாவது, 1956-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின் பிரிவு 441, உட்பிரிவு ( 1) -இன் கீழ் வருகின்ற, அந்நேர்வுகளைத் தவிர, நிறுமத்தை மூடக்கோரும் மனு தாக்கல் செய்யப்படும்பொழுதே, தீர்ப்பாயத்தால் நிறுமத்தை மூடும் நடவடிக்கை தொடங்கிவிட்டதாகக் கொள்ளப்பட வேண்டும் என நிறுமங்கள் சட்டத்தின் பிரிவு 441 ( 2) கூறுகிறது.எனவே, 1956-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின் பிரிவு 439-இல் அத்தகைய வகையமே இல்லாதபொழுது, மாகாண நொடிப்புநிலைச் சட்டத்தின் பிரிவு 9 ( 2) -ஐ பின்வாசல் வழியாக அறிமுகப்படுத்தும்பொருட்டு, அது உள்ளதைப்போன்று பொருள்கொள்ளப்பட முடியாதென்பதை வகையத்தின் பொருளமைவானது தெளிவுபடுத்துகிறது.

எனவே, 1920-ஆம் ஆண்டு மாகாண நொடிப்புநிலை சட்டத்தின் பிரிவு 9 ( 2) -க்கு, 1956-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின் பிரிவு 439-இல் தொடர்புடைய வகையம் ஏதும் இல்லாததால், 1956-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின் பிரிவு 529 ( 1) ( இ) -இன் சொல்நடையானது, 1920-ஆம் ஆண்டு மாகாண நொடிப்புநிலைச் சட்டத்தின் பிரிவு 47- ஐ மட்டுமே தெளிவாகக் குறிப்பிடுகிறதேயன்றி, பிரிவு 9 ( 2) -ஐ அல்ல; 1956-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின் பிரிவு 441 ( 2) -இன் பொருளமைவானது, அதாவது, தன்னிச்சையாக நிறுமத்தை மூடக்கோரும் மனுக்களுடன், இச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிறுமத்தை மூடக்கோரும் மனுக்கள் மாறுபடுவதாக தெரிகிறது எனவும், இவை அனைத்தும், கர்நாடக உயர் நீதிமன்றத்தின் தனியமர் நீதியரசரின் ஏற்புடைய சட்டக்கூற்றை மீண்டும் பார்க்கவேண்டிய தேவையில்லை என்னும் முடிவுக்கு இட்டுச்செல்கின்றன. உண்மையில்,

சட்டத்தின் இக்கூற்றானது, இதன்பின்னர், பம்பாய் உயர் நீதிமன்ற நீதியர் ஈராயத்தால், **ஏஷியன் பவர் கன்ட்ரோல்ஸ் லிமிடெட் -எதிர்-பபிள்ஸ் கோயல்** (2013) 3 மகாராஷ்டிரா எல். ஜெ. 811 என்ற வழக்கில் பின்பற்றப்பட்டு, அது பின்வருமாறு:

> "10. நொடிப்புநிலை அடைந்த நிறுமத்தை மூடுவதில், நொடித்தவராகத் தீர்ப்பளிக்கப்பட்ட நபர்களின் சொத்துகள் தொடர்பான நொடிப்புநிலை சட்டத்தின் கீழ் அவ்வப்போது நடைமுறையிலுள்ளவாறு, ( அ) நிருபிக்கத்தக்க கடன்கள் ( ஆ) ஆண்டுத் தொகை, எதிர்கால மற்றும் எதிர்பாரா பொறுப்புகள் மற்றும் ( இ) பிணைய மற்றும் பிணையமற்ற கடனாளர்களுக்குரிய உரிமைகள் ஆகியவை தொடர்பாக அதே விதிகள் நடைமுறையிலிருந்து, அவை பின்பற்றப்படுதல்வேண்டும் என 1956-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின் பிரிவு 529 ( 1) வகைசெய்கிறது.பிரிவு 529-இன் உட்பிரிவு ( 2) -இன் கீழ், அத்தகைய ஏதேனும் நேர்வில், நிறுமத்தின் சொத்துகளிலிருந்து ஆதாயம் பெற, நிரூபிக்க உரிமையுடைய அனைத்து நபர்களும் நிறுமத்தை மூடுவதன் கீழ் வந்து, அப்பிரிவின்படியாக நிறுமத்திற்கு எதிராக அவரவர்களுக்குரிய அத்தகைய கோரிக்கைகளை வைக்கலாம்.பிரிவு 529 ( அ) -ஆனது பணியாளர்களின் நிலுவை தொகைக்கும், பிணையக் கடனாளர்களின் நிலுவையான கடன்களுக்கும், பிரிவு 529 உட்பிரிவு ( 1) வரம்புரைக்கூறு ( இ) -இன் கீழ் அத்தகைய நிலுவைத் தொகைகளுக்கு இணையாக உள்ள அத்தகைய கடன்களுக்கு தரவரிசைப்படியாக மிகவும் மேலோங்கிய முன்னுரிமையை அளிக்கிறது. நிறுமத்தை மூடும் நடவடிக்கைகளில் கடன்களின் நிரூபணம் தொடர்பானவற்றுக்கிடையே, நொடிப்பு நிலை விதிகள் ஈர்க்கப்படுகின்றன. இது, நிறுமத்தை மூடும் உத்தரவு என்பதற்கு அடுத்த நிலையாகும். இக்கோட்பாடானது, டெறக்டே அண்டு கோலே லிமிடெட்-எதிர்-ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா, ஐ.எல்.ஆர் 1987 கர்நாடகா 2673 என்ற வழக்கில், கர்நாடக உயர் நீதிமன்ற நீதியர் ஈராயத்தில் மாண்புமிகு நீதியரசர் திரு. எம். என்.

வெங்கடாச்சலையா (அப்போதைய அறிவார்ந்த தலைமை நீதியரசர்) அவர்கள் அளித்த தீர்ப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (மேற்கண்ட) கான்பின் ஹேறாம்ஸ் லிமிடெட் என்ற வழக்கில், இந்நீதிமன்றத்தின் நீதியரசர் வழங்கிய நிறுமம் தொடர்பான தீர்ப்புரையிலும், நிறுமத்தை மூடுவது தொடர்பான வகையங்களின் சட்டம், குறிப்பாக பிரிவுகள் 528 மற்றும் 529-ஆனவை, நிறுமத்தை மூடுவதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்னரே, கடன் கோரிக்கையை நிரூபிக்கும் நிலை எழுகிறது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன என்னும் அக்கோட்பாடு பின்பற்றப்பட்டுள்ளது. கான்பின் ஹேறாம்ஸ் லிமிடெட் என்னும் வழக்கில் இந்நீதிமன்றம் கீழ்க்காணுமாறு தீர்ப்பளித்துள்ளதாவது: -

> "15. நிறுமத்தை மூடும் நடவடிக்கையின்பொழுது, தன்னுடைய அனைத்து கடன்களையும் நிரூபிக்க விழையும் பிணையக் கடனாளர், தன்னுடைய கடன்களை நிரூபிக்கும் முன்னர், பொதுக்குழு கடனாளர்களின் நலனுக்காக, அவர் தன்னுடைய பிணையைக் கைவிடவேண்டும்.அவர் பொதுக் குழு கடனாளர்களின் நலனுக்காக தன்னுடைய பிணையைக் கைவிடுவாரானால், அவர், தன்னுடைய கடன்கள் அனைத்தையும் நிரூபிக்கலாம். பிணையக் கடனாளர், தன்னுடைய பிணையை பணமதிப்பாக்கியிருப்பாரானால், பண மதிப்பாக்கப்பட்ட நிகரத் தொகையைக் கழித்தபின்னர், எஞ்சியுள்ள கடனை அவர் நிரூபிக்கலாம். நிறுமத்தை மூடும் நடவடிக்கையின் பொழுது, பிணையக் கடனாளர் தன்னுடைய அனைத்து கடன்களையும் நிருபிக்க விழையும் பொழுது, அவர் தன் பிணையைக் கைவிடும் நிலை எழுகிறது. நிறுமத்தை முடும் நடவடிக்கையின் பொழுது, அவர் தனக்கு கொடுக்க வேண்டிய அனைத்து கடன்களையும் நிரூபிக்க விரும்புவாரானால்,

அவர் பொது குழு கடனாளர்களின் நலனுக்காக அவசியம் தன்னுடைய பிணையைக் கைவிடவேண்டும். '"

(அசலிலுள்ள வலியுறுத்தல்கள்)

மெட்ராஸ், கல்கத்தா மற்றும் கர்நாடகா உயர் நீதிமன்றங்களின் தீர்ப்புரைகளில் ஒருமித்தவாறு பின்பற்றப்பட்டதைப்போன்றும், கான்பின் ஊறாம்ஸ் லிமிடெட் என்ற வழக்கில் நீதிமன்றத் தீர்ப்புரையில் வலியுறுத்தப்பட்டதைப்போன்றும், சட்டநிலைப் பாட்டைக் கருத்திற்கொண்டு, மேல்முறையீட்டாளர் தரப்பில் வலியுறுத்தப்பட்ட பணிந்துரையை ஏற்பது சாத்தியமன்று. பிணையக் கடனாளர், தன்னுடைய கடனைச் செலுத்தமுடியாத நிறுமமானது மூடப்படவேண்டும் என்னும் தன்னுடைய உரிமையை வலியுறுத்தும் முன்னரே, தனது பிணையை கைவிடக்கோரும் ஒரு நியாயமற்ற நிபந்தனையை சட்டம் விதிக்கவில்லை. நிறுமத்தை மூடுவதற்கான மனுவானது விசாரணைக்கு விசாரணைக்கு வந்த பொழுது, எதிர்மேல்முறையீட்டாளர் சார்பாக உருவாக்கப்பட்ட பிணை தொடர்பான நிலத்தை விற்பதன்மூலம், தனக்குரிய கடன்களை வசூலிப்பது சாத்தியமல்ல என்று நிறும் நீதிமன்ற அறிவார்ந்த நீதிபதி முன்பாக கூறியுள்ளார். எதிர்மேல்முறையீட்டாளரின் கோரிக்கையானது, இன்னும் நிறுமத்தை மூடும் நடவடிக்கைகளின் பொழுது நிருபிக்கப்பட வேண்டியுள்ளது.தனது கடன்களுக்கான பிணையமாக நிறுமத்தின் சொத்தின்மீது அடகு, பொருட்பிணை அல்லது பற்றுரிமை கொண்டுள்ள பிணையக் கடனாளர் ( அ) பிணையை செயற்படுத்தி, பணமதிப்பாக்கப்பட்ட தொகையை கழித்தபின்னர் உள்ள எஞ்சிய கடனை, நிறுமத்தை மூடும் நடவடிக்கைகளின்பொழுது நிருபிக்கவோ அல்லது ( ஆ) பிணையை, கலைப்பு அலுவலரிடம் ஒப்படைத்துவிட்டு, பிணையமற்ற கடனாளராக மொத்த கடன்களையும் நிரூபிக்கவோ அல்லது ( இ) தனது பிணையத்திற்குட்பட்ட சொத்தின் மதிப்பைக் கணக்கிட்டு, கணக்கிடப்பட்ட மதிப்பை கழித்த பின்னர், எஞ்சிய கடனை

நிரூபிக்கவோ அல்லது ( ஈ) பிணையை சார்ந்துநின்று, நிறுமத்தை மூடும் நடவடிக்கைகளின் பொழுது, எதையும் நிருபிக்காமலோ, இதில் ஏதேனுமொன்றைச் செய்யலாம். (பென்னிங்டனின் கம்பெனி லா ( 4-ஆவது பதிப்பு, பக்கம் 762)) நிறுமத்தை முடும் நடவடிக்கைகளின்பொழுது, பிணையக் கடனாளர், தன்னுடைய பிணையைக் கைவிடுவது மற்றும்/அல்லது தனது மொத்த கடன்களையும் நிருபிப்பது என்ற வாய்ப்பினைப் பெற்றுள்ளார். பிணையக் கடனாளர் நிறுமத்தை மூடும் நடவடிக்கைகளின் பொழுது அவ்வாறு செய்வாரானால், பிணையமானது கடனாளர்களின் குழுவின் நலனுக்காக நடைமுறைக்கு வந்துவிடும். மறுபுறத்தில், நிறுமத்தை மூடும் நடவடிக்கைகளின்பொழுது அவ்வாறு பணமதிப்பாக்கப்பட்ட தொகைக்கான கணக்கை அளிக்கவோ அல்லது எஞ்சிய கடன் தொடர்பாக நிரூபிப்பதற்கு அவரை இயல்விக்கும் பொருட்டு, பிணைக்குட்பட்ட சொத்தின் மதிப்பைக் கணக்கிட்டோ, நிறுமத்தை மூடும் நடவடிக்கைகளுக்கப்பால் வசூலிக்கப்பட்டிராத கடனின் அளவை நிரூபிக்க பிணையக் கடனாளருக்கு வழிவகை உள்ளது. வழக்கின் எக்கோணத்திலிருந்து பார்த்தாலும் அந்த நிலை இன்னமும் எட்டப்படவில்லை. "

18. உண்மையில், ஜிதேந்திர நாத் சிங்-எதிர் அபிஷியல் லிக்விடேட்டர், (2013) 1 எஸ்.சி.சி. 462 என்ற வழக்கிலுங்கூட, இந்நீதிமன்றமானது, 1920-ஆம் ஆண்டு மாகாண நொடிப்புநிலைச் சட்டப் பிரிவு 47 மற்றும் 1956-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின் பிரிவு 529- ஐ சுட்டிக்காட்டிய பின்னர், பின்வருமாறு தீர்ப்பளித்துள்ளதாவது:

" 16.1 பிணையக் கடனாளர், நிறுமத்தின் சொத்து அல்லது குறிப்பிட்ட சொத்திற்கு மட்டுமே பொறுப்புடையவராவார். பிணையக் கடனாளர் தனது பிணையைக் கைவிடவோ அல்லது அதனை பண மதிப்பாக்குவதோ என ஏதேனும் ஒரு வாய்ப்பையே பெற்றுள்ளார். பிணையக் கடனாளர் தன்னுடைய பிணையைக் கைவிடுவாரானால்,

அவர், பிற பிணையமற்ற கடனாளர்களைப்போன்று நிறுமத்தை மூடும் நடவடிக்கைகளின்பொழுது தனக்கு நிலுவையான கடனை நிருபித்து, நிறுமச் சொத்துக்களிலிருந்து ஆதாயப் பங்குகளைப் பெற உரிமை யுடையவராவார். பிணையக் கடனாளர், தன்னுடைய பிணையை பணமதிப்பாக்க விரும்புவாரானால், அவர் நிறுமத்தை மூடும் நடவடிக்கைகளுக்கப்பாலான ஒரு நடவடி க்கையில் தன்னுடைய பிணையை பணமதிப்பாக்க உரிமையுடையவராவார், ஆனால், அவர் பிணையை பணமதிப்பாக்கும் வரையில், அதனை பாதுகாக்கும் செலவுத்தொகையை கலைப்பு அலுவலருக்கு செலுத்தவேண்டும்.

(வலியுறுத்தல் கொடுக்கப்பட்டுள்ளது)

xxxxxxxxxxxxxxx

"17. எங்களுடைய மேற்படி முடிவுகளுக்கு ஆதரவாக, நாங்கள் தற்போது சில தீர்வறிக்கைகளைக் குறிப்பிடுகிறோம். அலகாபாத் பேங்க எதிர்-கனரா பேங்க் [ (2000) 4 எஸ்.சி.சி. 4061 என்ற வழக்கில், இந்நீதிமன்றத்தின் இரு நீதியரசர்களடங்கிய நீதியராயத்தில், மாண்புமிகு நீதியரசர் திரு. ஜகநாதராவ் அவர்கள், எஸ்.சி.சி.-இல் அறிக்கையிடப்பட்ட தீர்ப்புரையின் பத்திகள் 62, 63 மற்றும் 64-இல் பிணையக் கடனாளரின் இவ்வுரிமைகளைக் குறித்து விவாதித்த பின்னர், பகரப்பட்ட தீர்ப்புரையின் எடுகுறிப்பு இதன்கீழ் வருமாறு:(எஸ்.சி.சி. பக்கங்கள் 435-36)

> "62. பிணையக் கடனாளர்கள் இரு பிரிவிற்குள் வருகின்றனர். நிறும நீதிமன்றத்திற்கு செல்ல விரும்புவோரும், நிறுமத்தை முடும் நடவடிக்கைகளுக்கப்பால் நிற்க விரும்புவோரும் என்பவர்களாவர்.
>
> 63. மேற்குறிப்பிடப்பட்ட பிணையக் கடனாளர்களு முதல் பிரிவினர், பிரிவு 529-இல் குறிப்பிடப்பட்ட நொடிப்புநிலை விதிகளுக்குட்பட்டு, தங்களின் பிணையைக் கைவிட்டு,

ஆதாயப்பங்குக்காக நிறும் நீதிமன்றத்தை அணுகுபவர்கள்.நொடிப்புநிலை விதிகள், மாகாண நொடிப்புநிலை சட்டப் பிரிவுகள் 45 முதல் 50 வரையிலானவற்றில் அடங்கியுள்ளன. அச்சட்டத்தின் பிரிவு 47 ( 2) கூறுவதாவது, " நிறுவனக் கலைப்பு அலுவலரை அணுக விரும்பும் பிணையக் கடனாளர், தன்னுடைய கடனை நிரூபிக்கவேண்டும் மற்றும் அவர், பொதுக்குழு கடனாளர்களின் நலனுக்காக தன்னுடைய பிணையை கைவிட்டால்தான் தனது கடனை நிரூபிக்க முடியும். அந்நேர்வில், அவர் பிணையமற்ற கடனாளர்களின் வரிசையில் வந்து, பிரிவு 529 ( 2) -இல் வகைசெய்துள்ளவாறு, தனது ஆதாயப்பங்கைப் பெற்றுக்கொள்ளவேண்டும். கனரா வங்கியானது, இப்பிரிவிற்குள் வரவிரும்புகிறதா? என்பதை இந்நாள்வரையிலும், தெளிவுபடுத்தவில்லை.

xxx xxx xxx"

19. நாம் இப்பொழுது, 1956-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டப்பிரிவு 434 ( 1) ( ஆ) -இன் அடிப்படையிலான வாதத்திற்கு வருவோம். நிறுமத்தின் கடனாளருக்கு ஆதரவாக, தீர்ப்பாயத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் நிறைவேற்றல் அல்லது வேறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அது நிறைவேற்றப்படாமல் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ திருப்பப்படும் நிலையில்தான், பிரிவு 434 ( 1) ( ஆ) ஈர்க்கப்படும் என்பது " தெளிவாகிறது. ஒரு நிறுமமானது கடன்களைச் செலுத்த முடியாததாக கருதப்படும் மூன்று நிகழ்வுகளுள் இதுவும் ஒன்றாகும். இப்பொருண்மை சூழ்நிலையானது, பிரிவு 434 ( 1) -இன் உட்கூறு ( ஆ) -க்கு பொருந்துமானால், பின்னர் ஒரு நிறுமமானது தன்னுடைய கடன்களைச் செலுத்த முடியாததாகக் கருதப்படலாம். எனினும், பிரிவு 434 ( 1) ( ஆ) பொருந்துவதாயிருந்தால், பிரிவு 434 ( 1) ( அ) பொருந்தாததாகிவிடும் என்னும் பொருளில், பிரிவு 434 ( 1) -இன் உட்கூறுகள் ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று

வேறானவை என பொருள்படாது. மேலும் 1956-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டப்பிரிவு 433-இன் கீழான 15.04.2015-ஆம் தேதியிடப்பட்ட அறிவிப்பைத் தொடர்ந்து, நிறும மனுவானது 04.07.2015 அன்றுதான் தாக்கல் செய்யப்பட்டது என்பதையும் இவ்வழக்கின் பொருண்மைகளின் அடிப்படையில் நாங்கள் கூறலாம். இம்மனுவானது, 1956-ஆம் ஆண்டு நிறுமங்களின் சட்டப்பிரிவு 433 ( ஈ) உடன் பிரிவு 434 ( 1) ( ஆ) -இன் கீழ் தாக்கல் செய்யப்பட்டது.மனுவானது தாக்கல் செய்யப்பட்ட கட்டத்தில், அதாவது நிறும மனு தாக்கல் செய்யப்படும் 12.08.2015 வரையில், வசூல் அலுவலரால் நிறைவேற்றல் அல்லது வேறு நடைமுறையான, வசூல் சான்றிதழ் என்ற முறையில், வழங்கப்பட்டிருக்காததால், 1956-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டப்பிரிவு 434 ( 1) ( ஆ) -இன் கீழ் மனுவைத் தாக்கல் செய்வதற்கு சாத்தியமேயில்லை.மேல்முறையீட்டாளருக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞரின் இவ்வாதமானது இக்காரணத்திற்காகவும் நிராகரிக்கப்படவேண்டும் என்பது தெளிவு.

20. கடனாளி நிறுமத்திற்கெதிராக நிறுமத்தை மூடும் மனுவானது அனுமதிக்கப்பட்டுள்ளதால், தற்போது மூடும் நிலைக்காளாகும் நிறுமத்திற்கு பணக் கடன் கொடுத்திருக்கும் கடனாளர்களின் நலன்களை ஒப்பிட்டுப் பார்த்து நாங்கள் தற்பொழுதைய வழக்கைப் போன்ற வழக்குகள் தீர்மானிக்கப்பட வேண்டியுள்ளன எனக்கூறி, இதனை முடிக்கிறோம். நிறுமத்தை மூடக்கோரும் மனுவிற்கு நற்காரண விளக்கமேதும் அளிக்காமல், வேறுவகையில் நிலைநிறுத்தத்தக்கதான அம்மனுவை எதிர்ப்பதற்கு மேல்முறையீட்டாளர் போன்ற நபர்களுக்கு வாய்ப்பேதுமில்லை. எதிர்மேல்முறையீட்டாளர், கடன்கள் வசூல் சட்டத்தின் கீழான பரிகாரத்தைப் பெறவும், 1956-ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின் கீழ் நிறுமத்தை மூடும் நடவடிக்கையை மேற்கொள்வதற்கும், ஒரே நேரத்தில் இதற்குமதற்கும் அலைக்கழிக்கப்படுவதாக கூறப்படமுடியாதெனவும் நாங்கள் கூற விழைகிறோம். இங்கு, லிஸ்ஸெண்டன்-எதிர் சி.ஏ.வி. போஷ்க் லிமிடெட் (1940) 1 ஆல்.இ.ஆர். 425,

436-437 என்னும் வழக்கில், நீதியரசர் அட்கின் அவர்களின் தீர்ப்புரையைக் குறிப்பிடுவது மிகவும் முக்கியமாகும். அது கூறுவதாவது:

> " தற்பொழுதைய வழக்கில், தேர்ந்தெடுத்தல் என்னும் கோட்பாட்டிற்கு இடமில்லை.விண்ணப்பதாரர், மாற்று உரிமைகளை எதிர்க்கவில்லை.அதே உரிமையைத்தான் பெரியளவில் கோருகிறார்.மில்ஸ் -எதிர் டக்வார்த், (1938) 1 ஆல்.இ.ஆர். 318 என்னும் வழக்கில் அசட்டைக்காக, இழப்பீடு வழங்கப்பட்டிருந்த ஒரு வாதி, நீதிமன்றத்திற்கு செலுத்தப்பட்ட பெருந்தொகையிலிருந்த தீர்ப்புரைத் தொகையைப் பெற்றுக்கொண்ட பின்னர், இழப்பீட்டின் தொகை அளவுக்காக மேல்முறையிட்டு, இதேபோன்றதொரு எதிர்ப்பை தனது மேல்முறையீட்டில் எதிர்கொண்டார். மாண்புமிகு நீதியரசர் திரு. கிரியர் அவர்கள், ஆட்சேபணையை நிராகரித்து, பக்கம் 321-இல் முனைப்பாகக் கூறியதாவது:
>
> > " அவர் (வாதி) கூறியதாவது, " நான் இங்குமங்கும் அலையமாட்டேன்.நான் தீவிரம் காட்டப் போகிறேன். "
>
> விண்ணப்பதாரர் மாற்றுரிமைகளுக்கிடையே தேர்ந்தெடுப்பதை எதிர்க்கவில்லை. அவர், இழப்பீட்டிற்குரிய மறுப்பிற்கிடமற்ற உரிமையைப் பயன்படுத்தி, அதிகம் பெறும் உரிமையைக் கோருகிறார். ஒருவர் முதலாவதாக அளிக்கப்பட்ட உதவியைப் பயன்படுத்திக் கொண்டதால், இரண்டாவதாக அளிக்கப்பெறும் உரிமையை இழந்துவிடமாட்டார். "

எதிர்மேல்முறையீட்டாளரைப்போன்ற பிணையக் கடனாளர்கள், சட்டப்படியாக நிலுவையான தொகையை வசூலிப்பதற்கு இங்குமங்கும் துரத்தப்படும்பொழுது, ஒரே நேரத்தில் ஒன்றிற்கும் மேற்பட்ட பரிகாரத்தைப் பெற முயல்வதில் அவர்கள் " அலைக்கழிக்கப்படுவதில்லை ", ஆனால் அவர்கள் தீவிர உணர்ச்சிவேகத்துடன் செயல்பட உந்தப்படுகின்றனர்.

அதற்கிணங்க மேல்முறையீடுகள் செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்யப்படுகின்றன.

**[மாண்புமிகு நீதியரசர் திரு. ஆர்.எஃப். நாரிமன்]**

**[மாண்புமிகு நீதியரசர் திரு. நவீன் சின்ஹா]**

**புதுதில்லி**

29.01.2019

---

**<u>உரிமைத்துறப்பு</u>**

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."